கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்

Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com
Mobile no:- 07823535094
தலைவர்:- சிவத்தமிழ் காவலன் க.அரியரத்தினம்.

சித்திரை மாத இதழ்
NEWS BULLETIN
APRIL 2026
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
11/04 – 28/06	கொவன்றி தமிழ்மொழிக் கலைக் கழகம் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் MEADOW PARK SCHOOL ABBEY RD, COVENTRY CV3 4BD எனும் முகவரியில் நடைபெறுகின்றது
27/06	பிரித்தானிய தமிழ்ப் பரீட்சைச் சபையின் பரீட்சை

SATURDAYS	Time
Tamil	9.50am-12.30pm
Free Karate (Mr. Prathith.P teacher)	12.30pm – 2.30pm
Vocal (Mr. Dheenadayalan.P teacher)	12.30pm – 2.30pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	12.30pm – 4.00pm
Bharathanatiyam (Mrs. Ajantha.K teacher)	1.00pm – 5.00pm
Free Yoga Class (அருள்நிதி. Gowrisankar.D teacher)	12.30pm – 2.30pm
Free 11plus Verbal & Nonverbal Reasoning (Mrs. Gayathri Krish teacher)	2.00pm – 4.00pm
SUNDAYS	**Time**
Tamil	10.00am – 12.00pm
Bharathanatiyam (Mrs. Sathyagowri.J teacher)	10.00am – 3.00pm
Vocal (Mrs. Vanathy.S teacher)	9.00am – 1.00pm
Violin&Veena (Miss. Varani.S teacher)	9.00am – 2.00pm
Keyboard (Miss. Tiffany.L teacher)	11.30am – 2.30pm
Miruthangam (Mr.Wijayarajah.M teacher)	12.00am – 1.00pm
Free Miruthangam Online (Mr. Thillaiampalam Narendra teacher)	1.00pm – 3.00pm
Free 11plus Maths (Mr.Krish teacher)	9.00am – 11.00am







கதம்பம் பல்சுவை நிகழ்ச்சி

World peace and Harmony அமைப்பினரால் உலகெங்கிலுமுள்ள ஆர்வலர்களை இணைத்து பிரதி வியாழக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு Zoom இணைய வழியில் நடாத்தப்படும் கதம்பம் பல்சுவை நிகழ்ச்சியில், கொவன்றி தமிழ்மொழிக் கலைக்கழக மாணவர்களும் கலந்துகொண்டு, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். எமது பாடசாலை நிகழ்வுகளை நிர்வாக அலுவலர் திருமதி பொன்மணி ஜெய்கணேஷ் அவர்கள் தொகுத்து வழங்கி வருகின்றார்.



02/04/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வி பார்கவி பாலகிருஷ்ணன் "பாரதிதாசன்" என்ற தலைப்பில் கவிதையையும்,





செல்வன் ரோவிந் அரவிந்தன் பாரதியார் வேடத்தில் நடிப்பையும், செல்வி கவிநயா சுரேஷ்தாஸ் "பெண்ணின் பெருமை" என்ற தலைப்பில் கவிதையையும் வழங்கியிருந்தனர்.



09/04/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில் 09/04/2026 செல்வி அனுசாலி சுகிர்தராஜ் "சின்ன சின்ன வண்டி கட்டி" என்ற பாடலையும், செல்வன் மதுசன் கயேந்திரா "தமிழ் மொழியின் சிறப்பு" கவிதையையும், வழங்கியிருந்தனர்.






16/04/26 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வி நிஷ்விகா நிதர்ஷன் "புத்திசாலிக் காகம்" கதையையும், செல்வன் லக்ஷன் திருவரங்கன் தேவாரத்தையும், சுரத்தட்டு ஆசிரியை செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் அனுஜன் ஜெயசங்கர் சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.









23/04/2026 அன்று நடைபெற்ற கதம்ப நிகழ்வில், செல்வி சபீனா கோகிலநாதன் பாடலையும், செல்வி டஷ்னிகா கோகிலநாதன் பாடலையும், செல்வி சாய்சாரல் ஜெயக்குமார் கவிதையையும், செல்வி அக்சயா அசோக்குமார் "சிலப்பதிகாரம்" என்ற தலைப்பில் பேச்சையும், செல்வன் கவின் பிரகாஷ் "தோ தோ நாய்க்குட்டி" என்ற பாடலையும் வழங்கியிருந்தனர்.











(30/04/2026) அன்று நடைபெற்ற கதம்பம் நிகழ்வில், செல்வி ஜானுயா அகிலன் பாடலையும், செல்வி சர்வனி பராகரன் கவிதையையும், சுரத்தட்டு ஆசிரியை செல்வி ரி.ஃபனி லோரன்ஸ் அவர்களின் மாணவன் செல்வன் ரித்விக் ருத்ரா சுரத்தட்டு இசையையும் வழங்கியிருந்தனர்.









ஈழத்து புலமைகள்(பாகம் 34)

கடந்த சில வாரங்களாக நல்லைநகர் தந்த சைவத் தமிழ்க் காவலன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் சைவத்தமிழ் சேவைகளைப் பற்றி எழுதிவருகின்றேன். இவ்வாரமும் அன்னாரது சேவையின் ஒரு பகுதியைக் காண்போம்.

ஆறுமுக நாவலர் (தொடர்ச்சி)



ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் சைவம் அழிந்து, தமிழும் மறைந்து, யாழ்ப்பாணப் பிரதேசமே கிறிஸ்தவ, ஆங்கிலப் பிரதேசமாக மாறியிருக்கும் என வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசய்யர் அவர்கள் தமது நூலில் குறிப்பிட்டுள்ளது கவனிக்கற்பாலது.

இவர் தமது எழுத்தாலும், பிரசங்கத்தாலும் சைவ சமயத்தையும், தமிழ் மொழியையும் விருத்தி செய்து அழிவிலிருந்து காப்பாற்றிப் புத்துயிரளித்தார்.

வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்து தாமும் அதில் ஓர் ஆசிரியராக இருந்து இலக்கண இலக்கிய மற்றும் சைவசமய நூல்களையும் கற்பித்து வந்தார். இவரிடம் கற்றவர்களில் திருஞானசம்பந்தபிள்ளை, கைலாசபிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வண்ணார்பண்ணையில் வித்தியாசாலை ஆரம்பித்த பின்பு சிதம்பரத்திலும் ஓர் சைவப் பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்தார்.

தம்மால் எழுதப்படும் நூல்களை வெளியிடவும், திருத்தி எழுதப்படும் நூல்களையும் தூண்டுப் பிரசுரங்களையும் வெளியிடவும் வண்ணார்பண்ணையில் ஓர் சிறிய அச்சியந்திர சாலையை உருவாக்கினார். அது தமது வேலைகளுக்குப் போதாமையால் அதனை விற்றுவிட்டு, சென்னையில் ஒரு பெரிய அச்சியந்திர சாலையை உருவாக்கினார். சென்னையில் இந்த அச்சியந்திரசாலை அண்மைக்காலம் வரை சிறப்பாக இயங்கிவந்தது குறிப்பிடத்தக்கது.

முதல் பாலபாடம், இரண்டாம் பாலபாடம், நான்காம் பாலபாடம், முதற் சைவ வினாவிடை ,இரண்டாம் சைவ வினாவிடை, இலக்கணச் சுருக்கம், பெரியபுராண வசனம், திருவிளையாடல் புராண வசனம், சிதம்பர மான்மியம், கோயிற்புராண உரை, சைவ சமய நெறியுரை, நன்னூல் காண்டிகையுரை, என்பனவும் கிறிஸ்தவ கண்டனங்களும் இவரால் எழுதப்பட்டவையாக்கும்.

இவரால் திருத்தி எழுதப்பட்ட நூல்களாவன கந்த புராணம், பெரியபுராணம், சேது புராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவை உரை, தொல்காப்பியம் சேனாவரையர் உரை, இலக்கணக் கொத்து, தொல்காப்பிய சூத்திர விருத்தி, பிரயோக விவேகம், தருக்க சங்கிரக உரை, நன்னூல் விருத்தியுரை என அறியக்கூடியதாக உள்ளது. இவற்றில்; திருக்குறள் பரிமேலழகர் உரை, திருச்சிற்றம்பல கோவை உரை, தருக்க சங்கிரக உரை, முதலிய நூல்கள் இராமநாதபுரம் ஸ்ரீமானபொன்னுசாமி தேவர் அவர்களின் வேண்டுதலின் பேரில் ,அவர்களின் பொருட்செலவில் அச்சிட்டு வெளியிடப்பட்டன

இந்நூல்களுக்கு நாவலரின் நண்பராய் விளங்கியவரும் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்துவானுமாகிய மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும் வேறு சில அறிஞர்களும் நாவலரைப் பாராட்டி சிறப்புக் கவிதைகளை வழங்கினர்.

அவற்றில் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வழங்கிய சில கவிதைகளைக் காண்போம்.

"மன்னுபெருந் தமிழ்ப் பாடை யிலக்கணமு
மிலக்கியமும் வரம்பு கண்டோன்
பண்ணு சிவ புராணங்கள பல தெரிந்தோன்
சிவாகம நூற் பறவை மூழ்கி
உன்னுமனு பூதியேனும் விலைவரமபிலா
மணிகை யுறக் கொண் டுள்ளான்
இன்னு நய குணத்தினனாய் சைவமெனும்
பயிவளர்க்கு மெழிலி போலவான்"

(மீதி அடுத்த இதழில் தொடரும்)

ஆக்கம்
திரு தவத்துரை(தேவா) மாணிக்கம்
ஆசிரியர்

